**STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# கிளாம்பாக்கத்தில் ரூ.393 கோடியில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம்: முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்




**தாம்பரம்:** தென்மாவட்ட பயணிகள் வசதிக்காக வண்டலூர் அருகே கிளாம்பாக்கத்தில் ரூ.393 கோடியே 74லட்சத்தில் 88.52 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று திறந்து வைத்தார்.

கோயம்பேடு மற்றும் புறநகர் பகுதிகளில் நிலவும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கும் வகையிலும், வட மற்றும் தென் மாவட்டங்களுக்கு செல்லும் மக்கள் எளிதாக பயணத்தை மேற்கொள்ள வசதியாக கடந்த 2018-ம் ஆண்டில் அதிமுக ஆட்சியின்போது, வண்டலூர் அடுத்தகிளாம்பாக்கத்தில் 88.52 ஏக்கரில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் (சிஎம்டிஏ) சார்பில் ரூ.393 கோடியே 74 லட்சத்தில் புதிய பேருந்து நிலையப் பணிகள் தொடங்கப்பட்டன.

திமுக ஆட்சியில் இப்பணிகள் விரைவுபடுத்தப்பட்டன. தற்போது அனைத்து பணிகளும் முடிந்ததைத் தொடர்ந்து, அண்மையில் வெள்ளோட்டமும் விடப்பட்டது. இந்நிலையில் இப்பேருந்து முனையம் திறப்புவிழா நேற்று நடைபெற்றது. இதில்முதல்வர் ஸ்டாலின் பங்கேற்று, பேருந்து முனையத்தை திறந்துவைத் தார்.

அதைத்தொடர்ந்து, பேருந்து நிலைய நுழைவாயிலில் முன்னாள்முதல்வர் கருணாநிதி சிலையைதிறந்து வைத்து மரியாதை செலுத்தினார். பின்னர், அரசு விரைவு போக்குவரத்துக் கழக பேருந்துகள், அரசு போக்குவரத்துப் பேருந்துகள், மாநகர போக்குவரத்துப் பேருந்துகள்என முதற்கட்டமாக 10 பேருந்துகளை முதல்வர் ஸ்டாலின் கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

மேலும் இப்பேருந்து முனையத்தில் ஆவின் பாலகம் அமைப்பதற்கான அனுமதி ஆணையை மாற்றுத் திறனாளி பயனாளி ஒருவருக்கு வழங்கி, கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தின் சிறப்பை விளக்கும் காணொலிக் காட்சியைப் பார்வையிட்டார்.

**பேருந்து முனைய வசதிகள்:** இப்பேருந்து முனையம் 6 லட்சம்சதுரஅடி பரப்பளவில் 2 தரைகீழ்தளங்கள், தரைதளம், முதல்தளத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்குச் செல்லும் 3,500 மாநகர பேருந்துகள் வந்து செல்ல, மேற்கூரையுடன் கூடிய நடைமேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரே நேரத்தில் 130 அரசுபேருந்துகள், 85 தனியார் பேருந்துகளை நிறுத்த முடியும். 28.25 ஏக்கர்பரப்பளவில் வாகன நிறுத்துமிடம்,கடைகள், உணவகங்கள் உள்ளிட்டவை அமைக்கப்பட்டுள்ளன.

**ஓய்வறைகள்:** பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள், பேருந்து நடைமேடைகள் உள்ளிட்டவற்றை அறிந்து கொள்ளும் வகையில் பிரெய்லி பலகைகள் வைக்கப்பட்டுள்ளன. ‘க்யூஆர்’ கோடு மூலம் டிக்கெட்கள் வழங்கும் வசதி, 2 அடித்தளங்களில் 324 கார்கள், 2,769 இருசக்கர வாகனங்கள் நிறுத்தும் வசதி ஆகியவை உள்ளன.

பாலூட்டும் தாய்மார்களுக்கான அறை, ஏடிஎம் மையங்கள், காவல் கட்டுப்பாட்டு அறைகள், போக்குவரத்து அலுவலகங்கள் மற்றும் பயணிகளுக்காக 100 ஆண்கள், 40 பெண்கள் மற்றும் 340 ஓட்டுநர்களுக்கான படுக்கை வசதி கொண்ட ஓய்வறைகள் உள் ளிட்டவை உள்ளன.

**ரூ.140 கோடியில் ‘ஸ்கைவாக்’:** இந்நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு பேசும்போது, ‘‘கடந்த ஆட்சியில் கிளாம்பாக்கம் பேருந்து முனையப் பணிகள் 30

சதவீதம் மட்டுமே முடிவடைந்தது. 70 சதவீதபணிகள் இந்த ஆட்சியில் முடிக்கப்பட்டன. சிறு மழை பெய்தாலே குளம்போல் தண்ணீர் தேங்கி நின்றது. அதற்காக ரூ.13 கோடியில் மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளப்பட்டது. 8 கிமீ நீளத்துக்கு முழுமையான சாலை அமைக்கப்பட்டது.

6 ஏக்கரில் ரூ.11 கோடியில் அழகிய பூங்கா மற்றும் 16 ஏக்கரில் ரூ.13 கோடியில் காலநிலை பூங்கா ஆகியவை உருவாக்கப்பட்டுள்ளன.

இந்தப் பேருந்து நிலையம் முழுமையாக செயல்பாட்டுக்கு வரும்போது, ஒரு நாளைக்கு ஒரு லட்சம் பயணிகள் பயணிப்பார்கள். ரயில் நிலையத்தை இணைக்கும் வகையில் ரூ.140 கோடியில் ஸ்கைவாக் பணி தொடங்க உள்ளது'' என்றார்.

தென் மாவட்டங்களுக்குச் செல்லும் பேருந்து நிலையத்தில் மட்டும் நடைமேடைகளில் குறைவான இருக்கைகள் உள்ளன. ஆனால் மாநகரப் பேருந்து இயக்கப்படும் பகுதிகளில் ஒரு இருக்கை வசதிகூட இல்லை. எனவே அந்தப் பகுதியில் இருக்கை வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலும், இந்த முனையத்தில் இலவச தனியார்மருத்துவமனையும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், எஸ்.எஸ்.சிவசங்கர், சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, எம்.பி.க்கள் டி.ஆர்.பாலு, செல்வம், எம்எல்ஏ.க்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, வரலட்சுமி, போக்குவரத்துத் துறை செயலர் க.பணீந்திர ரெட்டி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை செயலர் சி.சமயமூர்த்தி, சிஎம்டிஏ உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் ராகுல்நாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## மத்திய அரசு விருதுகளை திருப்பி அளித்தார் வினேஷ் போகத்



**புதுடெல்லி:** இந்திய மல்யுத்த சம்மேளனத்தின் (டபிள்யூஎஃப்ஐ) தலைவராக பிரிஜ் பூஷண் சரண் சிங்கின் ஆதரவாளர் சஞ்சய் சிங் தேர்வு செய்யப்பட்டதைக் கண்டித்து, மத்திய அரசு தனக்கு அளித்தகேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளை வீராங்கனை வினேஷ் போகத்திருப்பியளித்தார். இந்த விருதுகளை பிரதமர் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்காக சென்றபோது போலீஸார் அவரைத் தடுத்தனர். இதையடுத்து டெல்லி கடமைப் பாதையிலேயே விருதுகளை வைத்து விட்டு அவர் திரும்பினார்.

மல்யுத்த வீராங்கனைகளிடம் பாலியல் அத்துமீறலில் ஈடுபட்டதாக பாஜக எம்.பியும், மல்யுத்த சம்மேளனத்தின் தலைவருமான பிரிஜ் பூஷண் மீது குற்றச்சாட்டு எழுந்தது. மல்யுத்த வீரர், வீராங்கனைகள் தொடர் போராட்டம் நடத்தியதையடுத்து அவர் பதவி விலகினார். இதைத் தொடர்ந்து நடைபெற்ற தேர்தலில் பிரிஜ் பூஷணின் ஆதரவாளர் சஞ்சய் சிங் மல்யுத்த சம்மேளனத் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார். இதற்கு மல்யுத்த வீரர், வீராங்கனைகள் மத்தியில் கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

இதையடுத்து மல்யுத்த விளையாட்டில் இருந்து விலகுவதாக வீராங்கனை சாக்சி மாலிக்கும், மத்திய அரசின் விருதுகளை திருப்பியளிப்பதாக மல்யுத்த வீரர்கள் பஜ்ரங் பூனியா, வீரேந்தர் சிங் ஆகியோரும் அறிவித்தனர்.


**பிரதமருக்கு கடிதம்:** இந்நிலையில் தான் பெற்ற மத்திய அரசு விருதுகளை திருப்பி அளிப்பதாக உலக சாம்பியன்ஷிப் போட்டிகளில் பதக்கம் வென்ற

வீராங்கனை வினேஷ் போகத்தும் அறிவித்திருந்தார். இதுதொடர்பாக பிரதமர் மோடிக்கும் வினேஷ் போகத் கடிதம் எழுதியிருந்தார்.

டெல்லி கடமைப் பாதையிலேயே விருதுகளை வைத்த வினேஷ் போகத்

இந்நிலையில் நேற்று அவர் விருதுகளை திருப்பியளிப்பதற்காக டெல்லியில் உள்ள பிரதமர் அலுவலகம் நோக்கி சென்றார். ஆனால் செல்லும் வழியில் போலீஸார் அவரைத் தடுத்ததால், டெல்லி கடமைப் பாதையிலேயே (கர்த்தவ்யா பாத்) கேல் ரத்னா, அர்ஜுனா விருதுகளை வைத்துவிட்டுத் திரும்பினார். பின்னர் அந்த விருதுகளை டெல்லி போலீஸார் எடுத்துச் சென்றனர்.

## இந்தோனேசியாவில் நிலநடுக்கம்: ரிக்டரில் 5.9 ஆக பதிவு




**பான்டா அச்சே (இந்தோனேசியா):** இந்தோனேசியாவின் அச்சே பகுதியில் இன்று (டிச.30) கடலுக்கடியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் உணரப்பட்டது. என்றாலும் பெரிய பாதிப்புகளோ, உயிரிழப்புகளோ இதுவரை பதிவாகவில்லை.

அச்சே பகுதியிலுள்ள கடற்கரை நகரமான சினாபாங்-ன் கிழக்கு பகுதியில் 362 கி.மீ. (225 மைல்) தூரத்தில் கடலுக்கடியில் 10 கி.மீ. (6.2 மைல்) ஆழத்தில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும், அதன்

தாக்கம் 5.9 ரிக்டராக இருந்ததாகவும் அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்திருந்தது.

இந்தோனேசிய வானிலை, காலநிலை மற்றும் புவி இயற்பியல் நிறுவனம், ”சுனாமி எச்சரிக்கை எதுவும் இல்லை என்றாலும் நிலநடுக்கத்துக்கு பிறகான பாதிப்புகள் குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது” என்றது.

சுமார் 27 கோடிக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் இந்தோனேசியா தீவுக்கூட்டம், பசிபிக் படுக்கையில் உள்ள ‘ரிங்க் ஆஃப் ஃபையர்’-ல் அமைந்துள்ளதால் அடிக்கடி நிலநடுக்கம் மற்றும் சுனாமி பாதிப்புகளுக்கு உள்ளாகி வருகிறது.

கடந்த நவ.21 அன்று ஏற்பட்ட 5.6 அளவிலான நிலநடுக்கத்தால் மேற்கு ஜாவாவின் சியாஞ்சுர் நகரில் 331 பேர் உயிரிழந்தனர், 600 பேர் காயமடைந்தனர். 2018 ஆம் ஆண்டு சுலேவசியில் ஏற்பட்ட சுனாமியில் 4,340 பேர் உயிரிழந்ததுக்கு பின்னர் ஏற்பட்ட அதிகாமான உயிரிழப்பு இதுவாகும்.

கடந்த 2004-ம் ஆண்டு இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 12-க்கும் மேற்பட்ட நாடுகளில் சுமார் 2,30,000 பேர் உயிரிழந்தனர். இதில் பெரும்பாலானவர்கள் இந்தோனேசிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**காலிஸ்தான் ஆதரவாளர் லக்பீர் சிங் லண்டாவை பயங்கரவாதியாக அறிவித்தது மத்திய உள்துறை அமைச்சகம்**




**புதுடெல்லி:** கனடா வாழ் காலிஸ்தான் ஆதரவாளர் லக்பீர் சிங் லண்டாவை மத்திய உள்துறை அமைச்சர் பயங்கரவாதியாக அறிவித்தது.

33 வயதான லக்பீர் சிங் லண்டா தடை செய்யப்பட்ட காலிஸ்தானி இயக்கத்தின் பாபர் கல்சா இண்டர்நேஷனல் அமைப்பைச் சேர்ந்தவர். இவர் மொஹாலியில் கடந்த 2021 ஆம் ஆண்டு பஞ்சாப் காவல்துறை தலைமையகத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் தொடர்புடையவராவார். அதேபோல் கடந்த டிசம்பர் 2022ல் சர்ஹாலி காவல்நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் இவருக்குத் தொடர்புள்ளதாகத் தெரிகிறது.

பஞ்சாப்பைச் சேர்ந்த லண்டா கடந்த சில ஆண்டுகளாக கனடாவில் வாழ்ந்து வருகிறார். அங்கிருந்து இந்தியாவுக்கு எதிரான சதித்திட்டங்களைத் தீட்டி வருவதாக அவர் மீது பல்வேறு குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்நிலையில் கடந்த செப்டம்பர் மாதம் பஞ்சாப் போலீஸார் லண்டாவுக்கு தொடர்புடைய 48 இடங்களில் அதிரடி சோதனை மேற்கொண்டனர். சோதனைக்கு முந்தைய நாள் லண்டாவின் ஆதராவளர் என்று கூறிய நபர் ஒருவர் பஞ்சாப் வாழ் வணிகரிடம் ரூ.15 லட்சம் கேட்டு தொலைபேசி வாயிலாக மிரட்டல் விடுத்தார். அதனைத் தொடர்ந்து அந்த நபர் கொடுத்த புகாரின் பேரில் போலீஸார் அடுத்தநாளே பல்வேறு இடங்களிலும் அதிரடி சோதனை நடத்தினர். சிலர் கைதும்

செய்யப்பட்டனர். இந்நிலையில் லக்பீர் சிங் லண்டாவை தற்போது பயங்கரவாதியாக அறிவித்துள்ளது மத்திய உள்துறை அமைச்சகம்.

**காலிஸ்தான் - கனடா சர்ச்சை:** இந்தியாவில் சீக்கியர்களுக்கு தனி மாநிலம் வேண்டும் என காலிஸ்தான் பயங்கரவாதிகள் வலியுறுத்தி வருகின்றனர். இதனை வலியுறுத்தி கனடாவில் உள்ள காலிஸ்தான் ஆதரவாளர்கள் இந்தியாவுக்கு எதிரான செயல்களில் தொடர்ந்து ஈடுபடுகின்றனர். கனடாவில் உள்ள இந்திய தூதரகம் முன்பு, கடந்த மார்ச் மாதம் அவர்கள் போராட்டம் நடத்தினர்.

காலிஸ்தான் பயங்கரவாதிகளின் செயல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கனடா அரசிடம் இந்தியா தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

இந்நிலையில் கனடாவில் காலிஸ்தான் டைகர் படைப்பிரிவின் தலைவரும், தீவிரவாதியுமான ஹர்தீப் சிங் நிஜார் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலையில் கனடாவில் உள்ள இந்திய தூதர் சஞ்சய் குமார் வர்மா மற்றும் டொரான்டோவில் உள்ள துணைத் தூதர் அபூர்வா வஸ்த்தவா ஆகியோர் முக்கிய பங்காற்றியுள்ளனர் என அவர்களின் போட்டோக்களுடன் கனடாவில் காலிஸ்தான் ஆதரவாளர்கள் போஸ்டர் ஒட்டினர்.

இந்நிலையில் நாடாளுமன்றத்தில் பேசிய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, "இந்திய அரசாங்க முகவர்களுக்கும் காலிஸ்தான் தலைவர் ஹர்தீப் சிங் நிஜார் கொலைக்கும் தொடர்பு இருப்பதற்கான நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் உள்ளன. " என்று கூறினார். இதனை இந்தியா அபத்தமானது என்றும் உள்நோக்கம் கொண்டது என்றும் தெரிவித்துள்ளது. இந்தியாவின் மூத்த தூதரக அதிகாரிகையை கனடா வெளியேற்றிய நிலையில் அதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இந்தியாவுக்கான கனடா தூதரை வெளியேறும்படி இந்தியா கூறியது. இவ்வாறாக மாறி மாறி குற்றச்சாட்டுகளோடு காலிஸ்தான் சர்ச்சையால் கனடா - இந்தியா உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## ‘சக்தி மசாலா’ சாந்தி துரைசாமிக்கு தொழில் முனைவோர் விருது



**சென்னை:** ‘சக்தி மசாலா’ நிறுவனத்தின் இயக்குநர் சாந்தி துரைசாமிக்கு, 2023-ம் ஆண்டுக்கான சிறந்த பெண் தொழில்முனைவோர் விருதை உலகளாவிய தொழில்முனைவோர் மேம் பாட்டு அமைப்பான ‘டைகான்’ (TiECON) வழங்கியுள்ளது.

சாந்தி துரைசாமி, சக்தி மசாலா நிறுவனத்தின் செயல்பாடுகள், அதன் விரிவாக்கங்கள் மற்றும் சி.எஸ்.ஆர். திட்டங்களைக் கவனித்து வருகிறார். இதுகுறித்து சாந்தி துரைசாமி கூறுகையில், “உலகெங்கிலும் உள்ள தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் ஒரு மதிப்புமிக்க அமைப்பிடமிருந்து இந்த அங்கீகாரம் கிடைத்ததில் மகிழ்ச்சி. வணிக உலகுக்கும், சமூகத்துக்கும் மேலும் பங்களிப்பு வழங்க இந்த விருது ஒரு உந்துதலாக இருக்கிறது. கிராமப்புற மக்களுக்கு குறிப்பாக பெண்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு வேலை வாய்ப்புகளை வழங்குவதில் நாங்கள் மிகுந்த திருப்தி அடைகிறோம்” என்றார்.

## ஐந்து ஆண்டுகளில் யுபிஐ பரிவர்த்தனைகள் 147 சதவீதம் உயர்வு!




**சென்னை:** இந்தியாவில் யுபிஐ பரிவர்த்தனைகளை 2023-ல் பல மடங்கு உயர்வை கண்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது பரிவர்த்தனைகள் மற்றும் மதிப்பு என இரண்டு ரீதியாகவும் உயர்ந்துள்ளதாக தகவல்.

2022-23 நிதியாண்டில் சுமார் 8,375 கோடி யுபிஐ பரிவர்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இது 2017-18 நிதியாண்டினை காட்டிலும் வருடாந்திர வளர்ச்சி விகிதத்தில் 147 சதவீதம் உயர்வு கண்டுள்ளது. 2017-18 நிதியாண்டில் மேற்கொள்ளப்பட்ட யுபிஐ பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை 92 கோடி. 2022-23 நிதியாண்டில் டிஜிட்டல் பேமெண்ட் முறைகளில் யுபிஐ-யின் பங்கு 62 சதவீதம். 2023 டிசம்பர் மாதத்தில் ரூ.17.4 லட்சம் கோடி என்ற மதிப்பை யுபிஐ பரிவர்த்தனைகள் எட்டியது. இதனை ரிசர்வ் வங்கி உறுதி செய்தது.

2017-18 நிதியாண்டில் யுபிஐ பரிவர்த்தனையின் மதிப்பு ரூ.1 லட்சம் கோடி. அதுவே 2022-23 நிதியாண்டில் யுபிஐ பரிவர்த்தனையின் மதிப்பு ரூ.139 லட்சம் கோடி என அதிகரித்துள்ளது. இதே போல கிராமப்புற சில்லறை வர்த்தகத்திலும் யுபிஐ பரிவர்த்தனைகள் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் நொடிப் பொழுதில் டிஜிட்டல் முறையில் சாமானியர்கள் தொடங்கி அனைத்து தரப்பினரும் பணத்தை பெறவும், அனுப்பவும் உதவுகிறது யுபிஐ

பேமென்ட். இது வணிகர்கள், வாடிக்கையாளர்கள் என அனைவருக்கும் சாதகமானதாகவும் உள்ளது. நகரம் முதல் கிராமம் வரை அனைத்து இடங்களிலும் யுபிஐ செயல்பாட்டில் உள்ளது. இதனால், ரொக்கத்தின் பயன்பாடு வெகுவாக குறைந்துள்ளது. கூகுள் பே, போன் பே, அமேசான் பே, BHIM என பல்வேறு செயலிகளின் மூலம் இந்தியாவில் யுபிஐ பரிவர்த்தனை மேற்கொள்ளப்படுகிறது. நாளுக்கு நாள் இதன் பயனர்கள் மற்றும் பரிவர்த்தனைகளின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வருகிறது

EVA STALIN IAS ACADEMY